சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

SC.123/2014

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் 2ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.சுப்பிரமணியன் (PW2) | நாள் 04.12.2019 |
| த/பெ. | தொழில் |
| வயது. | வட்டம் |
| கிராமம். | |

**அ.சா.2 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் காவல் துறை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று காஞ்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.06.2007ம் தேதி மதுராந்தகம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். காவல் ஆய்வாளர் திரு.மோகனவேல் ஆய்வாளர் அவர்கள் மதுவிலக்கு வழக்கு சம்பந்தமாக வாகன தனிக்கை செய்ய வேண்டி அழைத்ததின் பேரில் நானும், உதவி ஆய்வாளர் ரவிக்குமார், தலைமை காவலர் தனசேகரன், தலைமை காவலர் 1475 சிவஞானம் ஆகியோர்கள் ஆய்வாளருக்கு உதவியாக சித்தாமூர் காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட நீர்பெயர் கிராமம், சூணாம்பேட்டிலிருந்து சித்தாமூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது சூணாம்பேட்டிலிருந்து கருப்பு நிற ஸ்கார்பியோ கார் வேகமாக வந்தது. மேற்படி காரை ஆய்வாளர் அவர்கள் பார்டி சகிதம் தடுத்து நிறுத்தினார். மேற்படி வாகதன்தின் பதிவு டிஎண்.211கே.6244. ஸ்கார்பியோவில் முன்னாடி உட்கார்ந்திருந்த நபரை பெயர், விலாசம் விசாரிக்க தன் பெயர் முருகன் என்றும், த/பெ.சின்னதம்பி, தானாங்குப்பம், ஒங்கூர் என்றும் சொன்னார், காரின் ஓட்டுநரை விசாரிக்க அவர் பெயர் ஆறுமுகம், த/பெ.வரதராஜ், வெண்ணிலா நகர், பாண்டிச்சேரி என்று சொன்னார்கள். மேற்படி அவர்கள் ஓட்டி

வந்த ஸ்கார்பியோ காரின் பின் பக்கம் சோதனை செய்ய அதில் 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 வெள்ளை கேன்கள் இருந்தது. அதை பார்டி சகிதம் பிரித்து பார்த்து ஒவ்வொரு கேனிலும் விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் இருந்தது. அது சம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் 15.15 மணிக்கு 1வது எதிரி முருகனை கைது செய்து விசாரிக்க அவர் வாக்குமூலம் பெற்றார். அவர் தன்னுடைய வாக்குமூலத்தில் சத்தியா என்பவர் தனக்கு 35 லிட்டர் கொள்ளவு கொண்ட எரிசாராயம் 20 கேன்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் கொண்டுவந்ததாக சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் தலைமை காவலர் தனசேகரனும், ரவிக்குமார் உதவி ஆய்வாளார் அவர்களும் கையெழுத்து செய்தார்கள். மேற்படி வாகனத்தை உள்ளே தணிக்கை செய்து பார்க்க வாகனத்தையும் எரிசாராயத்தையும் ஆய்வாளர் கைப்பற்றினார். மேற்படி ரசாயண பரிசோதனை வேண்டி 35 லிட்டர் கொள்ளவு கொண்ட 20 கேன்களில் சுமார் 100 மி.லி வீதம் எடுத்து ஒரு பக்கட்டில் ஊற்றி அதை கலந்து 500 மி.லி கொண்ட 4 பாட்டில்களில் ஊற்றி சீல் வைத்து லேபிள் ஒட்டப்பட்டது. பொதுமக்கள் யாரும் முன்வராததால் தலமை காவலா் தனசேகரனம், உதவி ஆய்வாளர் ரவிக்குமாரும் கைபற்றதல் மகஜரில் கையெழுத்து செய்தார்கள். பிறகு அழித்தல் மகஜர் தயார் செய்து சம்பவ இடத்தில் கொட்டி அழித்தோம், அதில் தலைமை காவலர் தனசேகரன், உதவி ஆய்வாளர் ரவிக்குமாரும் கையெழுத்து செய்தார்கள். எதிரி சொத்துக்களுடன் 18.30 மணிக்கு மதுராந்தகம் காவல்நிலையத்திற்கு வந்து எதிரி மீது குற்ற எண்.707/2007 பிரிவு 41(ஏ) உடனினைந்த 6 மதுவிலக்கு சட்டம் பிரிவில் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 மற்றும் 2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக காவல் துறையினர் அன்றாட பணிகளை குறித்து வைக்க எங்களுக்கு பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போன்று வழக்கு சம்பவம் நடந்திருந்தால் அந்த விவரங்கள் என்னுடைய பாக்கெட் டைரியில் இடம் பெற்றிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய பாக்கெட் டைரியை ஆய்வாரிடம் கொடுக்கவில்லை. என்னுடைய பாக்கெட் டைரியை பார்தால் தான் நான் சொல்வது போன்று சம்பவம் நடந்ததா நான் அன்றைய தேதியில் பணியலிருந்தேனா என்று தெரியவரும் என்றால் நான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன்.

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் எடுப்பதற்கு பயன்படுத்தப்ட்ட பாட்டில்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா அல்லது தனிநபர்களிடமிருந்து வாங்கப்பட்டதா என்றால் தனிநபரிடமிருந்து வாங்கப்பட்டது. நான் சொல்வது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து இவ்வழக்கு சான்று பொருட்கள் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் காவல் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 மற்றும் 2வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 3வது எதிரியால் தத்தெடுக்கப்பட்டது.

(மறு விசாரணை இல்லை)